**செய்தி வெளியீடு எண்: 670** **நாள் : 14.12.2015**

# செய்தி வெளியீடு

மாற்றுத் திறனாளிகள் நலத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் காது கேளாதோர் மற்றும் பார்வையற்றோருக்கான அரசு சிறப்புப் பள்ளிகளில் காலியாக உள்ள பணியிடங்களான இடைநிலை ஆசிரியர், பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் துணை விடுதிக்காப்பாளர் பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நியமனம் செய்யப்படுவதற்கான விண்ணப்பம் அளித்திட நிர்ணயிக்கப்பட்ட கடைசி நாள் நீட்டிப்பு அறிவிப்பு.

மாற்றுத் திறனாளிகள் நலத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் காது கேளாதோர் மற்றும் பார்வையற்றோருக்கான அரசு சிறப்புப் பள்ளிகளில் காலியாக உள்ள பணியிடங்களான இடைநிலை ஆசிரியர், பட்டதாரி ஆசிரியர் மற்றும் துணை விடுதிக்காப்பாளர் பணியிடங்களுக்கு தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பதிவு அஞ்சல் மூலமாக மட்டும் வரவேற்கப்பட்டு, விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய கடைசி தேதி 15.12.2015 ஆக நிர்ணயிக்கப்பட்டிருந்தது. தற்போது தமிழகத்தில் பெய்த பெருமழையின் காரணமாக விண்ணப்பங்கள் சமர்ப்பித்திட கடைசி தேதி நீட்டிக்கப்பட்டு, **21.12.2015** வரை விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கலாம் என அறிவிக்கப்படுகிறது. இப்பணியிடங்கள் குறித்த அனைத்து அறிவுரைகள், விவரங்கள் மற்றும் மாதிரி விண்ணப்பத்தினை கீழ்க்கண்ட இணைய தளங்கள் மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

www.tn.gov.in & www.scd.tn.gov.in.

**மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையர்.**